# அனுமதியின்றி குளிர்பானம் விற்பனை

## ரெம்போ வியாபாரி மீது நடவடிக்கை




கோலாலம்பூர், மார்ச் 16-

ஜாலான் ராஜா கோலாலம்பூரில் லைசென்ஸ் இன்றி குளிர்பானம் விற்றவர் மீது கோலாலம்பூர் மாநகர் மன்றம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. சம்பந்தப்பட்ட இந்த வியாபாரி அடிக்கடி இடம் மாற்றி குளர்பானத்தை விற்பனை செய்து வந்திருக்கிறார். வியாபாரப் பொருட்களை டத்தாரான் மெர்டேக்கா கட்டடங்களில் அவர் மறைத்து வைத்திருந்தது தெரிய வருகிறது,

பொதுமக்கள் கொடுத்த புகாரை அடுத்து அதிகாரிகள் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளனர். ரெம்போ எனப்படும் அந்தக் குளிர்பான வியாபாரி மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கோலாலம்பூர் மாநகர் மன்றம் தனது முகநூல் பதிவில் வெளியிட்ட அறிக்கையில் கூறியது.

அந்த நபர் விற்பனை செய்த குளிர்பானத்தின் தூய்மை குறித்து பொதுமக்கள் புகார் தெரிவித்திருந்தனர். அதோடு வியாபாரத்திற்கான உபகரணங்கள் முறையாகக் கழுவப்படுவதில்லை எனவும் புகார் கிடைத்திருக்கிறது.

அந்த வியாபாரியிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் ஜாலான் லொம்போங், தாமான் மிகார்ஜா செராசில் உள்ள கிடங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டது.

அனுமதியின்றி இப்படி சட்டவிரோதமாக நடைபாதைகளில் அல்லது பொது இடங்களில் பொருட்களை விற்பனை செய்வோர் மீது தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கோலாலம்பூர் மாநகர் மன்றம் எச்சரித்தது. சட்டவிரோத அங்காடிக் கடைகள் குறித்து பொதுமக்களும் கோலாலம்பூர் மாநகர் மன்றத்திடம் புகார் செய்யலாம்.